01.12.2023
O.S.No.363/2012

பி.வா.சா.1.திருமதி.ஜெகதீஸ்வரி க.பெ.ராம்தாஸ்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். தாவா சொத்து சந்து பாதை என்றால் சரிதான். நான் அவ்வாறுதான் எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அதன் அகலம் 3 அடியும், நீளம் சுமார் 24 அடியும் இருக்கும். தாவா சொத்திற்கு தென்புறம்தான் எனது சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். நான் குடியிருந்து வருகின்ற சொத்துதான் தாவா சொத்திற்கு தென்புறம் உள்ளது என்றால் சரிதான். நான் குடியிருக்கும் சொத்து எனது தாயார் கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். எனது தாயார் என்ன அடி அளவின் அடிப்படையில் அந்த கிரைய பத்திரம் மூலம் கிரையம் வாங்கினார் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, ஆனால் 1/2 செண்டு என்று எனது தந்தை கூறியுள்ளார். எனது சொத்து 24 சதுரமீட்டர் கொண்ட இடம் என்று நான் கூறியுள்ளதால் அந்த அளவானது தற்பொழுது நகர நில அளவை ஆவணப்படி நான் கூறுகிறேன் என்றால் எனக்கு தெரியாது, எனது தந்தை சொல்லிதான் எனக்கு தெரியும்.

2. எனது தாயார் பெயரில் உள்ள அசல் கிரைய ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அந்த ஆவணத்தை அடமானம் வைத்துள்ளதால் நான் தாக்கல் செய்யவில்லை. எனது எதிர் வழக்குரையில் மேற்படி அசல் ஆவணத்தை அடமானம் வைத்துள்ளதாக காணப்படவில்லை என்றால் சரிதான். எனது தாயார் தாவா சொத்திற்கு தென்புறம் உள்ள நான் குடியிருக்கும் சொத்தை கிரையம் வாங்கும் போது நான் பிறக்கவேயில்லை என்றால் சரிதான். எனது தாயார் கிரையம் வாங்கிய சொத்து, இந்த தாவா சொத்து, வாதி கிரையம் வாங்கிய சொத்து ஆகியவை ஒரே சேகரமாக இருந்தது என்றால் சர்வே எண்.154/9 என்று இருந்ததாக சொல்வார்கள், எனக்கு அதை பற்றி தெரியாது. அவ்வாறென்றால் மேற்படி சர்வே எண்.154/9 என்பது எனக்கு எப்படி தெரியும் என்றால் பட்டாவை பார்த்து தெரிந்து கொண்டேன். இந்த வழக்கில் நான் எத்தனை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 13 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன்.

3. எனது தாயார், நான் குடியிருக்கும் சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பாகவே அதற்கு தென்புறம் உள்ள சொத்தை அய்யாவு என்பவர் கிரையம் வாங்கி உள்ளார் என்றால் அதே வருடத்தில் தான் அய்யாவும் கிரையம் வாங்கினார், எங்கள் கிரையத்திற்கு முன்பா, பின்பா என்று எங்களுக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ-2 ஆவணமான அய்யாவு என்பவரின் கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகலை அந்த கிரையமானது 13.09.1977ம் ஆண்டு பதியப்பட்டதாக காணப்படுகிறது. பி.வா.சா.ஆ-1 ஆவணமான எனது தாயார் கிரையம் வாங்கிய கிரைய ஆவண சான்றிட்ட நகலில் 05.09.1977 அன்று எனது தாயார் கிரையம் வாங்கியதாக காணப்படுகிறது என்றால் சரிதான். மேற்படி இரண்டு கிரைய ஆவணங்களும் ஒரு வார காலத்திற்குள் கிரையம் வாங்கப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள

ஆவணங்களின் சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பி.வா.சா.ஆ-1 ஆவணத்தின் படி எனது தாயார் கிழமேல் ஜாதியடி தென்புறம் 25, வடபுறம் 22-1/2, தென்வடல் ஜாதியடி 10-1/2 ஆகிய அளவு கொண்ட சொத்தை கிரயம் வாங்கியதாக காணப்படுகிறது என்றால் சரிதான். மேற்படி அளவீடுகளுக்கு அப்பாற்பட்ட விஸ்தீரணம் எதுவும் எங்களுக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரிதான். (வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)